FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318706

1. District : Coimbatore PS: Vigilance & Anticorruption Year: 2025 FIR No.: 22/2025/AC/CB Date: 13/10/2025 0615hrs
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: as amended in 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23/09/2025 AN Date to : 08/10/2025 12.00 noon
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 10.10.2025 Time : 1615hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 10.10.2025 Time : 1615hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Tamil computer typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North east about 20 Km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : o/o masagoundan chettipalayam village panchaya masagoundan chettipalayam village Annur Block, Coimbatore District
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Rajen Prabagaran (b) Father's/ Husband's Name : Samuval
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 45/2025 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : D.No. 6-1009, moothanoor, Annur Taluk, Coimbatore District
தொழில் Building mestri முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Tr. Rangasamy, Panchayat Secretary o/o masagoundan chettipalayam Village panchayat Annur Block, Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— No delay —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

enclosed separate sheet

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. முருகன் மௌனதாஸ்
13-10-2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12/10/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 13.10.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 0800

Name: பெயர் G. Aramugam
Rank: நிலை Inspector of Police No எண்

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.22/2025/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.C8318706 ன் தொடர்ச்சி–

வெள்ளிக்கிழமை 10.10.2025 ஆம் தேதி மாலை 16.15 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை, அன்னூர் தாலூக்கா, மூக்கனூர் கிராமம், கதவு எண்.6–1009 ல் வசிக்கும் சாமுவேல் என்பவரது மகன் S.ராஜன்பிரபாகரன் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு –அனுப்புனர் S.ராஜன்பிரபாகரன், த/பெ.சாமுவேல், கதவு எண்.6-1009, மூக்கனூர் கிராமம், அன்னூர் தாலூக்கா, கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கோவை. அய்யா, நான் கோவை, அன்னூர் தாலூக்கா, மூக்கனூர் கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துவிட்டு, கட்டிட மேஸ்தரியாக கடந்த 28 வருடமாக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2012 ல் எனது பெயரில் கோவை, அன்னூர் வட்டாரம், மசக்கவுண்டன் செட்டிப்பாளையம் கிராம ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மிருதுளா கார்டனில் க.ச.எண்.452/1A ல் 1353 சதுரடி கொண்ட வீட்டுமனையை (சைட் எண்.118) நான் வாங்கி அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 04.06.2012 ஆம் தேதி ஆவண எண்.4977/2012 ஆக பதிவுசெய்தேன். அதே போல் அன்றே தலா 1353 சதுரடி கொண்ட இரண்டு வீட்டுமனைகளை (சைட் எண்.119 மற்றும் 120) வாங்கி அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.4976/2012 ஆக பதிவுசெய்தேன். மேலும் க.ச.எண்.452/2A ல் 1353 சதுரடி கொண்ட சைட் எண்.343 மற்றும் 344 ஆக இரண்டு வீட்டுமனைகளை வாங்கி அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 26.06.2012 ஆம் தேதி ஆவண எண்.5732/2012 ஆக பதிவுசெய்தேன். தற்போது மேற்படி வீட்டுமனைகளை விற்கலாம் என்று முடிவு செய்தபோது, மேற்படி வீட்டுமனையானது வரன்முறை படுத்திய பின்புதான் அதிக விலைக்கு விற்க முடியும் என்று தெரியவந்தது. எனவே அந்த வீட்டுமனைகளை வரன்முறை படுத்த வேண்டி எனது வீட்டுமனை அமைந்துள்ள மசக்கவுண்டன் செட்டிப்பாளையம் பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமி அவர்களை கடந்த செப்டம்பர் மாதத்தில் நேரில் சென்று பார்த்து எனது வீட்டுமனை வரன்முறை படுத்துவது சம்மந்தமான விவரங்களை கேட்டேன். அதற்கு அவர் அவருக்கு தெரிந்த இன்ஜீனியர்

பூபதி அவர்களை வரன்முறை படுத்துவது சம்மந்தமாக பார்க்க சொல்லி என்னை அனுப்பி வைத்தார். அதன்படி நானும் அவர்ர சந்தித்து விவரங்களை கூறி ஆவணங்களை கொடுத்தேன். அவரும் என்னிடம் சர்வீஸ் பீஸ் ரூ.4,500/- பெற்று கொண்டு வீட்டுமனையை வரன்முறை படுத்த வேண்டி என்பெயரில் மசக்கவுண்டன் செட்டிப்பாளையம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு விண்ணப்பித்தார். அதன்பின்பு அந்த மாதத்தில் என்னிடம் இன்ஜீனியர் பூபதி அவர்கள் மூன்று செட் பூர்த்தி செய்த DTCP க்கு செலுத்த வேண்டி இந்தியன் வங்கி சலான்களை கொடுத்து கோவில்பாளையம் இந்தியன் வங்கிக்கு சென்று சலானில் குறிப்பிடப்பட்ட பணத்தை செலுத்த சொன்னார். நானும் அதே போல் வங்கிக்கு சென்று பணத்தை செலுத்தினேன். அதனைதொடர்ந்து, அடுத்த நாள் 23.09.2025 ஆம் தேதி மதியம் மேற்படி பணம் செலுத்தியதற்கான சலானுடன் மசக்கவுண்டன் செட்டிப்பாளையம் பஞ்சாயத்து அலுவலகம் சென்று ரங்கசாமி அவர்களை சந்தித்து சலானை கொடுத்து வீட்டுமனை வரன்முறை படுத்துவது சம்ந்தமாக கேட்டேன். அதற்கு அவர் அரசு கட்டணமாக மேற்படி வீட்டுமனைகளுக்கு செலுத்தவேண்டும் என்று கூறி அதே அலுவலகத்தில் பணம் வசூல் செய்யும் நபரிடம் பணம் செலுத்தி ரசீது பெற்றுவரும்படி கூறினார். அதன்படி நானும் பணம் ரூ.22,640/- ஐ செலுத்தி அதற்கான 3 கம்ப்யூட்டர் ரசீதை பெற்றேன். அதில் ஒரு ரசீது எண்.2025-26/11/13/13/7/208, தேதி 23.09.2025 ரூ.5,660/–, இரண்டாவது ரசீது எண்.2025-26/11/13/13/7/209, தேதி 23.09.2025 ரூ.5,660/– மற்றும் மூன்றாவது ரசீது எண்.2025-26/11/13/13/7/210, தேதி 23.09.2025 ரூ.11,320/– குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி ரசீதுகளை எடுத்து கொண்டு அங்கிருந்த பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமி அவர்களிடம் காண்பித்தேன். அவர் அதனை பார்த்து விட்டு அவருக்கு தனியாக ரூ.20,000/– வேண்டும் என்று கேட்டார். நான் அவரை குறைக்கும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் ரூ.5,000/–ம் குறைத்துகொண்டு ரூ.15,000/–ம் கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அப்போது என்னிடம் அவ்வளவு பணமில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் இரண்டு நாட்களில் பணம் ரெடி செய்து கொண்டு வாருங்கள் என்று சொன்னார். நானும் அதன்படி இரண்ட நாள் கழித்து மூன்றாவது நாள் ரூ.15,000/– ரெடி செய்து பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமியிடம் அவரது அலுவலகத்தில் வைத்து கொடுத்த போது அவர் அலுவலகத்தில் இருந்த புஷ்பா என்ற ஒரு பெண்ணைக் கூப்பிட்டு அவரிடம் கொடுக்க சொன்னார். நானும் அந்த பணத்தை புஷ்பா அவர்களிடம் கொடுத்தேன். அதனை அவர் பெற்றுக்கொண்டு பணத்தை எண்ணிபார்த்துவிட்டு பணம் ரூ.15,000/– உள்ளது என்று பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமியிடம் சொல்லிவிட்டு சென்றார். அதன்பின்பு அவர்

என்னிடம் சீக்கீரம் அதிகாரியிடம் கையொப்பம் பெற்று DTCP அப்ரூவல் ஆணையை பெற்று தருகிறேன் என்று சொன்னார். நானும் சரி என்று அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டேன். அதன்பின்பு செப்டம்பர் மாதம் கடைசி வாரத்தில் ஒரு நாள் இன்ஜீனியர் பூபதி அவர்கள் என்னை அழைத்து மேலும் மீதி 2 வீட்டுமனைக்கு பணம் செலுத்தவேண்டியுள்ளது என்று கூறி மசக்கவுண்டன் செட்டிப்பாளையம் பஞ்சாயத்து அலுவலகம் சென்று பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமி அவர்களை நேரில் பார்த்து பேசி வரும்படி கூறினார். அதன்படி நானும் அடுத்த நாள் 29.09.2025 அன்று மசக்கவுண்டன் செட்டிப்பாளையம் பஞ்சாயத்து அலுவலகம் சென்று கிளர்க் ரங்கசாமியை பார்த்தபோது அவரும் மேலும் 2 வீட்டுமனைக்கு அரசு கட்டணம் பஞ்சாயத்திற்கு செலுத்த வேண்டும் என்று கூறி அருகில் இருக்கும் பஞ்சாயத்து அலுவலரிடம் அரசு கட்டணத்தை பற்றி கேட்டு தெரிந்துகொண்டு அந்த பணத்தை அவரிடம் கொடுக்கும்படி கூறி, என்னை அலுவலகத்திற்கு வெளியே அழைத்து கொண்டு வந்து அவருக்கு தனியாக பணம் ரூ.10,000/– கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அப்போது நான் பணம் கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் வெளியே செல்வதாகவும் சற்று நேரத்தில் திரும்பி வந்து சொல்கிறேன், அதுவரை அலுவலகத்தில் காத்திருக்குமாறு சொல்லி சென்றுவிட்டார். அதன் பின்னர் நானும் அந்த அலுவலகத்தில் இருந்த பஞ்சாத்து கிளர்க் சொன்ன அலுவலரிடம் அரசு கட்டணம் எவ்வளவு கட்ட வேண்டும் என்று கேட்டேன். அவரும் 2 சைட்க்கு அரசு கட்டணமாக மொத்தம் ரூ.16,500/– கட்ட வேண்டும் என்று சொன்னார். நான் யோசித்து பார்த்ததில் ஏற்கனவே 4 வீட்டுமனைகளுக்கு பஞ்சாயத்துக்கு மொத்தம் பணம் ரூ.22,640/- மட்டுமே செலுத்தி ரசீது பெற்றுவிட்டேன். ஆனால் இப்போது பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமியும் அவரது அலுவலரும் மீதமுள்ள உள்ள 1 வீட்டுமனைக்கு பதிலாக 2 வீட்டுமனைகள் என்று கூறி பணம் ரூ.16,500/– செலுத்தவேண்டும் என்று கூறுகிறார்கள். மேலும் அவர்கள் கேட்கும் தொகை ஏற்கனவே கட்டியை அரசு கட்டணத்தை ஒப்பிட்டு பார்க்கும்போது மிகவும் அதிகமாக இருப்பது போல் தெரிகிறது. பின்னர் நான் அலுவலகத்திலேயே காத்திருந்து விட்டு, பஞ்சாயத்து கிளர்க் அலுவலகத்திற்கு திரும்பி வராததால், நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் நானும் கட்டிட வேலைக்கு சென்று கொண்டு பிசியாக இருந்ததாலும் என்னிடம் ரங்கசாமி அவர்கள் கேட்ட பணம் கொடுக்க தன்னிடம் போதுமானதாக இல்லை என்பதாலும், பஞ்சாயத்து கிளர்க் அவர்களை அலுவலகம் சென்று பார்க்கவில்லை. அதனைதொடர்ந்து கடந்த 08.10.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு மீண்டும் மசக்கவுண்டன் செட்டிபாளையம் பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமி அவர்களை

அவரது அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்து எனது வீட்டுமனையை வரன்முறை படுத்த வேண்டி கேட்ட போது அவர் ஏன் இவ்வளவு நாள் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான், அன்றைக்கு நீங்க சொன்னதால அலுவலகத்தில் ரொம்ப நேரம் வெயிட் பண்ணிட்டு கிளம்பிவிட்டேன். அன்றைக்கே நீங்க எவ்வளவு பணம் என்று சொல்றேன் சொன்னீங்க, அதுனால தான் இப்ப வந்தேன். கொஞ்சம் கம்மிபண்ணி சொல்லுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் அன்னைக்கே நான் ரூ.10,000/– தனியாக வேணும்னு சொல்லியிருக்கேன் என்றார். அதற்கு நான் கொஞ்சம் கம்மி பண்ணுங்க, நானும் ரொம்ப கஸ்டத்தில் இருக்கேன் ஷ்டப்படுறேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி ரூ.9,000/– கொடுத்துருங்க என்று சொன்னார். பின்னர் நான் மீண்டும் கொஞ்சம் கம்மி பண்ணுங்க என்று கெஞ்சி கேட்ட போது, அவர் சரி வேணும்னா ஒரு 500/– ரூபாய் குறைச்சு ரூ.8,500/– சீக்கீரம் எடுத்து வந்து கொடுத்துருங்க, BDO விடம் ஆர்டர் வாங்கி வைக்கிறேன் என்றார். அதற்கு நான் சரிங்க என்று சொல்லி, வரும் சனிக்கிழமை தான் எனக்கு சம்பளம் கொடுப்பாங்க சார், அத வாங்கிட்டு திங்கட்கிழமை பஞ்சாயத்து அலுவலகம் வந்து கொடுக்கிறேன் என்று கூறினேன். அவரும் சரி என்றார். உடனே அங்கிருந்து நான் வீட்டிற்கு கிளம்பிவிட்டேன். பின்னர் நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் எனது பெயரிலுள்ள மேற்படி வீட்டுமனைகளை வரன்முறைப்படுத்த பரிந்துரை செய்து அதன் அப்ருவல் ஆணையை பெற்று கொடுப்பதற்காக மசக்கவுண்டன் செட்டிபாளையம் பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமி அவர்கள் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.8,500/–ஐ அவருக்கு கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே எற்கனவே ரூ.15,000/– ஐ லஞ்சமாக கேட்டு புஷ்பா என்பவர் மூலம் அந்த லஞ்ச பணத்தை பெற்றுக்கொண்டவரும் தற்போது மீண்டும் லஞ்சமாக பணம் ரூ.8,500/– கேட்கும் மசக்கவுண்டன் செட்டிபாளையம் பஞ்சாயத்து கிளர்க் ரங்கசாமி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/, 10.10.2025 (S.ராஜன்பிரபாகரன்) இடம் – கோவை, தேதி – 10.10.2025. மேற்படி புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டது, எனவே எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 13.10.2025 ம் தேதி 06.15 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற

எண்.22/2025/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படி மேற்படி எதிரி திரு.ரங்கசாமி, கிராம ஊராட்சி செயலாளர், மசக்கவுண்டன் செட்டிப்பாளையம், கோவை என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Madam, Received the above complaint on 10.10.2025 at 16.15 hrs. Sd/- x-x-x-x 10/10/2025 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. Madam, after conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.22/2025/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 13.10.2025 at 06.15 hrs. Sd/- x-x-x-x 13/10/2025 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

13/10/2025

(G.ஆறுமுகம்)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.